
# புதிய காலைக்கதிர்

காலை 01 சித்திரை -2014 கதிர் 04











காலையடி மறுமலர்ச்சி மன்ற மாணவர் மன்றத்தால் வெளியிடப்படும்

கல்வி ~ கலை ~ இலக்கிய

இதழ்













காலையடி மறுமலர்ச்சி மன்ற மாணவர் மன்றத்தால் வெளியிடப்படும்

# புதிய காலைக்கதிர்

**காலை 01** **சித்திரை -2014** **கதிர் 04**

ஆசிரியர் : நா. லக்சிகா

படைப்பாளிகள் : ச. அனுஜன்
இ. டிலாஜினி
தி. திலீனா
ஆ. கஜானி
சி. விதுர்ஷா
பா. பிரியங்கா
கு. பதுர்சிகா
யோ. கஜாந்தினி
யோ. நிலாவினி
ச. கிரிசா
ச. சரணியா
ப. சபீனா
கு. டன்சா
அனோயா

ஓவியங்கள் : த. யோகதாஸ்
தி. மித்திரன்
யோ. நிலாவினி
சி. பவிஸ்ரன்
கே. கஜீந்தன்
ம. ரகுராஜ்
யோ. வினிஸ்ரா
ந. டயானா
கி. தமிழினி
பி. றொசாலினி
த. லகிர்ஷா
ப. சபீனா
அ. துஸ்மிகன்
கே. கஸ்மியா
யா. சேயவன்
இ. நிலுக்ஷன்
கு. கபிலாஸ்
சி. அபிசன்
பு. நிறோசன்
ஜே. ருசியந்தன்
பா. துக்ஷிகன்

வடிவமைப்பு : தனுட்

வெளியீடு : மாணவர் மன்றம்,
காலையடி மறுமலர்ச்சி மன்றம்,
காலையடி, பண்டத்தரிப்பு,
யாழ்ப்பாணம், இலங்கை.

விலை : ரூபா 20/-

## சுய ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன

இப் புதிய காலைக்கதிர் சஞ்சிகையினைக் காலாண்டு இதழாக வெளியிட முயற்சி எடுக்கப்படுகின்ற போதும், தட்டச்சு, பக்க வடிவமைப்பு ஆகியவற்றில் ஏற்படும் தாமதத்தால் இவ்விதழ் சற்றுக் காலம் தாழ்த்தி வருவதையிட்டு மனம் வருந்துவதுடன், இனிவரும் காலங்களில் முறையாக மூன்று மாதங்களிற்கு ஒன்று என்ற அடிப்படையில் வெளிவரச் செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் என்பதையும், ஆக்கங்களும் ஆதரவும் கிடைக்கும் பட்சத்தில் மாதம் ஒரு இதழைக்கூட வெளியிட முடியும் என்பதையும் மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

மாணவச் சகோதரர்கள் ஆக்கங்களைத் தயாரிக்கும்போது அவற்றை முற்று முழுதாக வேறு வெளியீட்டில் இருந்து பிரதி பண்ணுவதையோ, சிறிய சில மாற்றங்களுடன் தருவதையோ, பெரியவர்கள் எழுதி அதில் சிறியவர்களின் பெயர்களைப் போட்டுத் தருவதையோ தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். இவ்வாறான செயற்பாடுகள் மாணவரின் ஆளுமை விருத்தியைப் பாதிப்பதாக அமைவதுடன் எமது முயற்சிக்கும் முட்டுக்கட்டையாக அமையும் என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம். புதிய காலைக்கதிர் ஆசிரியர் குழு மாணவர்களின் ஆக்கங்களின் தரத்தில் அதிக கட்டுப்பாடு கொண்டிருப்பதில்லை. ஓரளவு புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்ற, சொந்தப் படைப்புக்களுக்கு முன்னுரிமை அளிக்கின்றது. மற்றும் சமூகத்திற்குப் பயனுள்ள தொகுப்புக்களையும் (வேறு இடங்களில் இருந்து பிரதிபண்ணப்படுபவை) துணுக்குக்களையும் வரவேற்கின்றது. எனவே இனிவரும் காலங்களில் மாணவர்கள் இவ்விடயத்தில் அதிக கவனமெடுக்கவும்.

# Strawberry உடன் ஒருவர்



செல்வன் ச. அனுஜன், க.பொ.த (உ/த)


இலங்கையிலேயே எனக்கு தெரிஞ்ச அருமையான இடம் "கண்டி" தான். முதல் முறையா கண்டிய சுத்திப்பாத்திட்டு நுவரேலியாக்கு வந்து சேந்தோம். அப்ப பின்னேரம் 6 மணி இருக்கும் .

சசியும், Sir உம் எங்களுக்கு சாப்பாடு வாங்க போட்டினம். நாங்க எல்லாம் Bus க்கு பக்கத்திலயே இறங்கி நிண்டோம். ஒரு மொக்க Drum அ வச்சு ஒரு நாலு பேர் மாறி மாறி அலுப்பு குடுத்தாங்கள்.

நான் கொஞ்ச நேரம் அவங்கள பாத்துக்கொண்டு நிண்டன். தொடர்ந்தும் அந்த அற்புதமான இசைய கேக்க முடியாம கொஞ்சம் தள்ளி Busன்ர மற்றப் பக்கம் வந்தன். அதில மூண்டு பேர் Photo எடுத்துக்கொண்டு நிண்டாங்கள், நானும் அவங்களோட போய் நிண்டு Photo எடுத்தன்.

இடையில பாலா "என்ர Drum அ என்ன பண்ணுறாங்களோ" எண்டு சொல்லிக்கொண்டு போனான். நாங்க எல்லாரும் Colour களற Sweaters, மப்பிளர், குளிர் தொப்பி எல்லாம் வாங்கிப் போட்டிருந்தோம். எல்லாருக்கும் தெரியும் Tour முடிஞ்சதுக்கு பிறகு இதுகள தொடவே மாட்டம் எண்டு அனா எல்லாருக்கும் வாங்க வேணும் எண்டு ஆசை அனேகமா எல்லாரும் வாங்கியும் இருந்தோம்.

நாங்க கதச்சு கொண்டு நிக்கேக்கையே அந்த பக்கம் ஒருத்தர் வந்தார். தையல் போட்ட கறுப்பு செருப்பு, சேட்டுக்கு மச் ஆகவேணும் எண்டு போடாத கோட்டும் குளிருக்காக மட்டும் போட்ட ஒரு தொப்பியும் ஒரு சாதாரண தொழிலாளிக்கான உருவத் தோட கையில ஒரு Shopping bag உம் வச்சிருந்தார். மற்றக் கையில ஒரு பிளாஸ்டிக் பெட்டில Strawberry பழங்கள் வச்சிருந்தார். அவர் ஒரு Strawberry வியாபாரி.



நான் இதுவரைக்கும் Strawbarry சாப்பிட்டதேயில்லை. ஆனா Jam, Ice cream சில Advertisement இல எல்லாம் பாத்து கொஞ்சம் பழகின பழம்தான். எனக்கு அத நேரில பாத்ததுமே வாங்கி சாப்பிட்டு பாக்க வேணும் எண்டு இருந்திச்சு.

ஒரு பேச்சுக்கு என்ன விலை எண்டு கேட்டிட்டு, 150 ரூபா குடுத்து ஒரு Box அ வாங்கினன். அவர் ஒரு சந்தோசமான சிரிப்போட மிச்சக்காச குடுத்தார். நானும் பதிலுக்கு சிரிச்சிட்டு பெட்டிய திறந்தன். என்ன மாதிரியே என்ர friends உம் இதுவரைக்கும் சாப்பிட்டதில்ல. எல்லாருமே எடுத்து சாப்பிட்டாங்கள்.

ஒருத்தன் சாப்பிர்ற மாதிரியே படம் எடுத்தான். இன்னொருத்தன் படம் எடுத்த உடனேயே அதப் பறிச்சு சாப்பிட்டான்.

எல்லாரும் வடிவா சாப்பிட்டிட்டு Bus இல ஏறி Seat இல இருந்தோம். ஜன்னல் வழியா தூரத்தில ஒரு Van நிக்கிறது தெரின்ச்சிது. அதில முன் seat இல ஒரு தடியன் சிக்கிரட் பத்தி கொண்டு இருந்தான். Strawberry விக்கிறவர் என் Seat க்கு மூண்டு Seat முன்னுக்கு இருந்த ஒரு பெண்ணுக்கு Strawberry குடுத்திட்டு வெளியால நின்டு ஜன்னலால காசு வாங்கி கொண்டு இருந்தார்.


Van இல இருந்தவன் Straeberry விக்கிறவர கூப்பிட்டான். அவர் கவனிக்காம Strawberry வித்துக் கொண்டு இருந்தார். அவன் திரும்பத் திரும்ப கூப்பிட்டுவிட்டு பக்கத்தில நிண்ட அவன்ர ஆள் ஒருத்தன அனுப்பினான்.

அவன் Strawberry விக்கிற வருக்குக் கிட்ட வந்து, "அங்க வரட்டாம்" எண்டு அதிகாரத் தொனியில் சொன்னான். அவரும் ஒண்டும் சொல்லாம வேற பக்கம் நடக்க அரம்பிச்சார். அவன் அவர விடாம கையப்பிடிச்சு இழுத்துக் கொண்டு Van பக்கம் போனான். Van இல இருந்த தடியன் சிகரெட்ட தூக்கிப் போட்டு விட்டு "என்ன கூப்பிட்டா வர மாட்டியா" எண்டு வெருட்டினான்.

Straeberry காறர் குரல்ல சின்ன நடுக்கத்தோட "விடுங்க தம்பி, நான் யாவாரம் பண்ணுற நேரம்" எண்டார்.

அவன் "நாங்க என்ன சல்லி கொடுக்க மாட்டமா" எண்டான். அவர் ஒண்டும் பேசாம நிண்டார். அவன் பையப் பிடுங்கி ஒரு பெட்டிய வெளியில எடுத்தான். பெட்டிய திறக்காமலே இடைவெளியால ஒரு பழத்தை எடுத்து திண்டான்.

"குடுங்க தம்பி தொழில் பண்ணுறது தம்பி" என்றார் அவர். அவன் ஒரு மாதிரி அவர பாத்துக் கொண்டே Vanஅ start பண்ணிக் கொண்டு போனான். அவர் பின்னலயெ கெஞ்சிக்கொண்டு ஓடினார்.



கொஞ்சத்தூரம் போனதும், பைய வெளியால தூக்கி போட்டுவிட்டு சுட்டு விரல வெளியால பயமுறுத்திற மாதிரி காட்டிக்கொண்டு போனான்.

Strawberry விக்கிறவர் ஓடிப்போய் அது எல்லாத்தையும் எடுத்து, தன்ர சேட்டில லேசா துடைச்சு பைய்யில அடுக்கினார்.

பைய கையில கொழுவிக் கொண்டு கண்ணத் துடச்சுக்கொண்டு வந்தார். அவர் எங்கட Bus க்குக் கிட்ட வரேக்க, அவர கூப்பிட்டு இன்னொரு Strawberry Box வாங்கினேன். அவர் அந்த பெட்டியள்ள ஒரு நல்லபெட்டியா எடுத்துக் குடுத்தார்.

ஆனா அவர் முகத்தில முதல் இருந்த மாதிரி உண்மையான சிரிப்பு இல்ல.

பாலா Drumஅ கொண்டு வந்து என்ர பக்கத்து Seat இல இருந்தான்.

"Strawberry ஆ மச்சி எங்க குடு" எண்டு வாங்கி சாப்பிட்டுக்கொண்டே Drumஅ ஒரு வழி பண்ண ஆரம்பிச்சான்......!

★★★★★

# நட்பு

செல்வி ப. சபீனா, தரம் 07




*வீட்டில் கிடைப்பது அன்பு*
*பாடசாலையில் கிடைப்பது கல்வி*
*விளையாட்டில் கிடைப்பது நட்பு*
*உயிரிலும் மேலானது அந்த உறவு*
*யாராலும் பிரிக்க முடியாதது நட்பு*



# ஆக்கபூர்வமான படைப்புக்களால் எதிர்கால சமுதாயத்தை உருவாக்குவோம்

இ. டிலாஜினி, க.பொ.த. (உ. த)



காலத்தால் அழியாத கோலங்கள்
ஞாலத்தில் சிறப்பான வண்ணங்கள்
உள்ளத்தில் உருவாகும் எண்ணங்கள்
உலகிற்குப் பயன் தரும் வித்துக்கள்

சித்திரக் கோலமாய் குமிழியிட்ட சிந்தனைகள்
முத்திரை பதித்ததே மனமெனும் மண்டபத்தில்
பத்திரமாகவே தொகுத்தெடுத்து புத்தகமாய்
வித்தகரானோர் வழங்கினார் சமுகத்திற்கு

இதயத்தின் ஓட்டத்தில் சுருதியைக் கூட்டும்
உதயத்தின் விழுமிய உணர்வினை ஊட்டும்
பதமாக விளங்கும் உயரிய கருத்துக்கள்
இதமாக என்றும் உலவுமே சமுகத்தில்



கண்ணிலே காணும் காட்சிகள் யாவுமே
மண்ணிலே மணம்வீசும் படைப்புக்களாய் மலருமே
விண்ணிலே பரவிடும் காற்றோடு அதன்புகழ்
பண்ணில் பரதத்தில் அருங்காட்சி ஆகுமே

கனவோடு உருவாகும் இன்றைய படைப்புக்கள்
நனவாக மலர்ந்திடும் நாளைய உலகிலே
வனப்போடு வளமான களத்திணை ஆக்கியே
முனைப்போடு பேணுவோம் இன்றைய இளையோரை



மழலைகள் அவரின் மனதினை ஈர்க்கும்
சிறப்பான நூல்கள் சிந்தனையை வளர்க்கும்
சுழல்கின்ற புவிவாழ் மக்களின் எதிர்காலம்
வளமாக மாறிடும் என்றும் நலமாக

தீந்தமிழில் தேன்பால் சுவை கலந்து
பைந்தமிழில் கவியியற்றிப் பண்ணோ டிசைத்து
காந்தமாய்க் கவர்ந்திடும் படைப்புக்கள் பலதை
ஈந்தனரே தமிழ்ப்புலவர் இப்புவியில் நிலைக்க



இன்றைய இளைஞர்கள் நல்லபெரும் கலைஞர்களாய்
பன்முக ஆளுமையால் சமுதாயம் எழுச்சிபெற
தன்னிலை உணரும் தவநிலை அடைந்து
முன்னிலை நிற்குமாற்றல் முகிழ்த்திடச் செய்யவேண்டும்

☆☆☆

# இன்றே தெளிந்திடு...!

செல்வி பிரியங்கா பாஸ்கர்.
க.பொ.த. (உ. த)

துடுப்பற்ற ஓடமாய்
வாழ்வதனை ஆக்கிடும்
போதையின் வலையிலே
துவள்கிறார் இளைஞர்கள்




மதுவுக்கு மயங்கும் மனது
மடிந்து போகுதே சுய நினைவு
மதுவால் தோன்றுதே தீய உணர்வு
அதனால் அழியுதே உன் வாழ்நாள் கனவு

போதையென்ற போலியிலே
மயங்கி விழும் காளைகளே!
கற்றுயர வேண்டிய காலத்தை
முற்றும் அழித்தல் தகுமோ

☆☆☆

# உழைத்து வாழும் வாழ்வு

செல்வி கஜானி ஆறுமுகசாமி. க.பொ.த (உ/த)

விடிந்துவிட்டது. அந்த வயற்கரைக் கிராமம் ஆரவாரத்துடன் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தது. வயலில் இருந்து சற்றுத் தள்ளியிருந்த அந்தச் சிறிய குடிசையின் துவாரங்கள் வழியே கதிரவன் தனது கதிர்களைப் பரப்பி, ஆச்சியின் சேலைக்குள் அடக்கமாக உறங்கிக்கொண்டிருந்த சிறுமி சோபியைத் தொட்டுத் துயிலெழுப்பியது. விடியலைக் கொஞ்சமும் விரும்பாதவளாக கண்ணைக் கசக்கிக்கொண்டு எழுந்தவள், "ஆச்சி! அப்பு இன்னும் வரேல்லையே?" என்று கேட்டுவிட்டு மீண்டும் சேலைக்குள் தன்னைச் சுருட்டிக்கொண்டாள்.

"சோபி! இண்டைக்குப் பிள்ளைக்குப் பள்ளிக்கூடமல்லே. எழும்பிப் போய் பல்ல மினுக்கணை, ஆறு மணியாவிட்டுது, பிள்ளையார் கோயில் மணி அடிக்குது" என்ற பாட்டியின் தொடர் வலியுறுத்தலைத் தாண்டி இனியும் படுக்க முடியாது என்பதை உணர்ந்துகொண்டவள், "சரி ஆச்சி" என்றுகொண்டு எழுந்து, பனையோலைப் பாயை சேலையோடயே சேர்த்துச் சுத்தி கட்டிலில் ஒரு பக்கமாக வைத்தாள். பரணில் தொங்கிக் கொண்டிருந்த சட்டிக்குள் இருந்து பற்பொடியை கையில் கொட்டி, விரலால் தொட்டு வாயினுள் வைத்துத் தீட்ட, சந்தைக்கு மரக்கறி கட்டிக்கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு வந்த தாத்தா வீட்டிற்குள் நுளைந்ததை ஜிம்மி தனது வாலை அசைத்துக்கொண்டு வருவதிலிருந்து அறிந்தாள். கையிலிருந்த பற்பொடியைக் கீழே கொட்டிவிட்டு, "அப்பு எனக்கென்ன வேண்டியந்தநீங்கள்?" என்று கேட்டபடி ஓடிச்சென்றவளுக்கு, "இண்டைக்கு பிள்ளைக்கு ஒண்டும் வேண்டியரேல்ல" என்ற பதிலால் முகம் வாடிப்போனது.




"சரி, பல்லு மினுக்காம என்ன செய்யிறா? வா பல்ல மினுக்க." வேண்டா வெறுப்போடு பல்லைத் துலக்கிவிட்டு, கிணத் தடியில் இருந்த வாளியிலும், பேசினிலும் கிடந்த தண்ணியில் அள்ளிக் குளித்துவிட்டு, வெள்ளைச் சட்டையைப் போட்டு, தலை மயிரை இரட்டைச் சடையாய் பின்னிக் கொண்டு, சுவாமி அறைக்குள் நுழைந்து வீபூதித் தட்டில் கிடந்த வீபூதியை அள்ளிப் பூசிவிட்டு, வாசலில் நின்ற நித்திய கல்ஜாணியில் இருந்து ஒரு பூவைப் பிடுங்கித் தலையில் வைத்துக் கொண்டு, "ஆச்சி சாப்பாடு...." என்றபடி ஓடினாள். "இஞ்சாங்கோ, பிள்ளைக்கு இந்த ஓடியல் மா உருண்டையை தீத்தி விடுங்கோ, உங்களுக்குப் பழஞ்சோறும், நேற் றையான் கருவாட்டுக் குழம்பும் வைச்சிருக்கிறன். போகேக்கை மறக் காமல் சாப்பாட்டுப் பாசலை எடுத்துக்கொண்டு போங்கோ." என்றா பாட்டி அடுப்படியில் இருந்தபடி. இரண்டு உருண்டைகளை எடுத்து வாய்க்குள் திணித்துக்கொண்டாள் சோபி.



தாத்தாவும் பழஞ் சோற்றை கருவாட்டுக் குழம்போடு சாப்பிட்டு விட்டு கிணத்தடியில் இருந்த தண்ணியில் கையையும் வாயையும் கழுவிவிட்டு வந்து, "சோபி போய் ரோட்டில நில். நான் மம்பெட்டியேம் கத்தரிக் கொட்டையையும் எடுத்துக் கொண்டாறன்." என்று கூற, பாட்டி "இஞ்சாங்கோ ரண்டு சாப்பாட்டுப் பாசலையும் மறக்காமக் கொண்டு போங்கோ" என்றா. "ஓம் நான் எடுத்துப்போட்டன், போட்டு வாறன். செல்லன் வந்தா ஒருக்கா தோட்டத்துத் தென்னையளுக்கு தண்ணி விடச்சொல்லு" என்றபடி தாத்தா, கைத்தாங்கலாக ஒரு கையில் மண்வெட்டியையும், மற்றக் கையில் இருந்த பையில் சோற்றுப் பாசல், கத்தரி விதை, மாற்று உடுப்பு என்பவற்றை எடுத்துக் கொண்டுவந்து சைக்கிளை எடுத்தார். வாசலில் தாத்தாவுக்காக காத்து நின்ற சோபியை "ஏறு பிள்ளை" என்றுகொண்டே கையிலிருந்த பையை சைக்கிள் கான்ரிலில் கொழுவினார். தோழில் மண்வெட்டி யுடன் முன் பாரில் சோபியையும் ஏற்றிக்கொண்டு மிதிபலகையை மிதிக்கத் தொடங்கினார். "பிள்ளை நீ பள்ளியில நல்லாப் படிக்கி றனியோ?" "ஓம்பு நான் நல்லாப் படிப்பன் எண்டு ரீச்சர் சொல்லுறவா." "அப்பிடியே! நீ கெட்டிக்காரி தான்....."

பச்சைக் கம்பளம் விரித்தாற் போல் பசுமையான வயல்வெளியை



ரசித்துக்கொண்டு, தாத்தாவிடம் ஒவ்வொரு காணிகளுக்குள்ளும் இருக்கின்ற பயிர்களைப் பற்றிக் கேட்டுக் கொண்டும், பல்வேறு குறுக்கு விசாரணைகளுடனும் இடம் பெற்ற பயணம் பண்டத்தரிப்புச் சந்தியை அடைந்தது. "சரி பிள்ளை உன்ர பள்ளி வந்திட்டுது, இறங்கு. இந்தா உனக்கு ஒரு பாசல். இடேக்க சாப்பிடு. பேந்து நான் கூட்ட வாறன்." என்று சொல்லிவிட்டு, தனது முறுக்கு மீசையை ஒரு தரம் முறுக்கிவிட்டு, வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு வயலை நோக்கிப் புறப்பட்டார். வழியில் பண்டத்தரிப்பு ரௌணில் இரண்டு பக்கெற் பிஸ்கட்டும், ஒரு நூடுல்ஸ் பையையும் சோபிக்காக வாங்கிப் பையில் போட்டுக் கொண்டார். சைக்கிளை வேகமாக மிதித்தார் வெளிப்புலக் காணியை நோக்கி. காணியில் மிளகாய்ச் செடி சோர்ந்து போய்க் கிடந்தது. சைக்கிளைப் பக்கத்தில் இருந்த பனையில் சாத்திவிட்டு, உடுப்பை மாத்திக் கொண்டு, பற்றைக்குள் மறைத்து வைத்திருந்த மிசினை தூக்கிக்கொண்டு சுண்ணாம்புக் கிணத்தடிக்குச் சென்றார். மிசினை இழுத்து ஸ்ராட் பண்ணியபின் மண்வெட்டியால் மிளகாய்ச் செடிக ளுக்குத் தண்ணி விடப் பாத்தி கட்டிவிட்டு, பக்கத்தில் இருந்த செல்லத்துரையனின் காணிக்குள்ளி ருந்த முளைக்கீரையைப் பிடுங்கிக் கட்டி, வாய்க்கால் தண்ணியில கீரையைக் கழுவி வரம்பில் வைத்து விட்டு, தண்ணி உடைக்குதா என்று வரம்பில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

"என்ன ஐயா இண்டைக்குக் கனநேரமாத் தண்ணி இறைக்கி றியள்?" என்றபடி வந்தான் செல்லத்துரை. "இல்லத் தம்பி இந்தப் பருவம் மழை பொய்ச்சதால, எல்லாச் செடியும் காஞ்சு கிடக்கு. மிளகாப் பழமும் பழுத்திட்டுது, அதுதான் இறைக்கிறன்." என்றபடி எழுந்து சென்று, கதையும் காரியமுமாக மிளகாய்ப் பாத்திக்கு நடுவில் குழி தோண்டி கத்தரிக் கொட்டைகளைப் போட்டு மண்ணால்

மூடினார். "தம்பி, உன்ர காணீக்க முளைக் கீரை கொஞ்சம் பிடுங்கின்னான். என்ர பேத்தி ஒவ்வொரு நாளும் சொல்லிறவள், பள்ளியிலை ரீச்சர் சொன்னவா நல்லது எண்டு, அதுதான் இண்டைக்குக் கீரைப்புட்டுச் செய்து குடுப்பமெண்டு." என்றபடி வரம்புக்கு வந்தார்.

வெய்யில் உச்சி வானத்துக்கு ஏறிவிட்டிருந்தது. பையில் இருந்த சோத்துப் பாசலைப் பிரிக்க, வாசனையோ மூக்கை முட்டி வாயில் எச்சியூறப் பண்ணியது. வாளைமீன் குழம்பு, வெண்டிக்காய்ப் பாற்கறியும், சோத்துக்கு நடுவே ஒரு ஊர்க்கோழி முட்டையும் எட்டிப் பார்த்தது. சோறோடு மீன் முட்டை எல்லாவற்றையும் சாப்பிட்டு முடிக்க மதியம் 12 மணியானது. மிசிணை நிப்பாட்டிப் பத்தைக்குள் வைத்து விட்டு, ஐந்தாறு மிளகாய்களையும் பிடுங்கிப் பையில் போட்டு, ஒரு சுத்து காணியைப் பார்த்துவிட்டு, பனை மரத்தில் சாத்தி நின்ற சைக்கிளை எடுத்து உருட்டிக் கொண்டு மெயின் ரோட்டில் ஏறி, சுடலைக் காணிக்குள் முற்றியிருந்த பூசணிக்காயையும், சொதி வைக்கச் சுரக்காயையும் பிடுங்கிக் கொண்டு, வேட்டியைக் கட்டிக்கொண்டு சைக்கிளில் வீட்டை வந்தடைந்தார்.

"சோபி ஊர்ப் பிள்ளையளோட பள்ளிக் கூடத்தால வந்திட்டாள். சாப்பிட்டுவிட்டு உங்கால விளையாடப் போட்டாள்." என்றபடி, அந்த நேரம் பார்த்துக் கோழி வேண்ட வந்த கந்தையாவிற்குக் கோழியை



விற்ற பாட்டி அந்தக் காசை சோபிக்காகச் சேர்க்கிற உண்டியலில் போட்டா. சமையல் அறைக்குப் போய் சோறு வடிச்ச கஞ்சியைச் சிரட்டையில் கொண்டு வந்து நீட்டினா. குந்திலை இருந்து கஞ்சியைச் சுவைத்த தாத்தா, "நான் தோட்டத்துக்குப் போறன்." என்றபடி நடந்து பக்கத்தில் இருந்த தோட்டக்காணிக்குள் நுளைந்தார். "அப்பு இப்பவே வாறியள்? இந்தாங்கோ பப்பாசிப் பழமும், செவ்விளனித் தேங்காயும். சோபிக் குட்டிக்கு உயிர்." என்றவாறு உரப்பை ஒன்றை நீட்டினான் செல்லன். "அவள் பிள்ளைக்கு ஒன்டு காணும், மிச்சத்தை உன்ர பிள்ளையளுக்குக் கொண்டு போய்க் குடு. சரி சரி கெதியாய் வீட்ட வா. பின்னேரம் ரண்டுபெரும் விவசாயக் கூட்டத்துக்குப் போக வேணும்." என்று உற்சாகத்துடன் சொன்னவரிடம், "என்னத்துக்கு அப்பு?" என்றான்.

"எள்ளு வைச்சதிலை, நல்ல எள்ளெண்டு பாராட்டி ஏதோ பரிசு தரப்போகினமாம். அதுதான் கட்டாயமா வரச்சொன்னவங்கள். அதுக்கு என்னைவிடக் கூடக் கஸ்ரப்பட்டது நீயெல்லே. நல்ல உடுப்பாப் போட்டுக்கொண்டு வா." என்றுவிட்டு வேகமாக வீட்டை நோக்கி நடந்தார். மகன் போலத் தன்னைப் பேணும் அந்தக் குடும்பத்துக்கு தான் என்ன கைமாறு செய்யப் போகிறேனோ என்று எண்ணியவனாக, வீறு நடை போட்டுச் செல்லும் தாத்தாவைப் பார்த்தபடி வீட்டுக்குச் செல்ல ஆயத்தமானான் செல்லன்.

---

# பள்ளிப் பருவம்

யோ.நிலாவினி



வாழ்க்கை எனும் சோலையிலே
நான் கண்ட பொக்கிஷமே
அழியாத நற்பெயர்கள் பல
அணிகலனாய் வழங்கிடுமே

இன்பமுடன் துன்பத்தையும்
இரு கரத்தில் தாங்கி
ஈட்டிடுவோம் சாதனைகளென
எழுந்திடுவோம் சிறுவர்கள் நாம்

சாதனையும் வேதனையும்
சிட்டுக்கள் நாம் சுமந்து
சிறந்திடுவோம் பாரினிலே
சிக்கனமாய் வாழ்ந்திடுவோம்



இக்ஷ்டமுடன் பலப்பல
திட்டங்கள் நாம் வகுத்து
இலட்சியப் பயணந்தனை
தொடங்கிடுவோம் இக்கணமே
இன்பமான எம் வாழ்வில்
அழியாத பசுமை நினைவு
அதுதான் நாம் அனுபவிக்கும்
இனிமையான பள்ளிப்பருவம்


# பாரதி கண்ட புதுமைப் பெண்!

தி. திலீனா



பாராய் பெண்ணே புதுமைப் பாரினை
படைத்திட வாராய் புதிய யுகம்தனை
இன்னும் ஏனடி வாசல் படியினுள்
அடக்கு முறைக்குள் அடங்கி வாழ்கிறாய்

சொல்லத் துணிவின்றி நம்மை அடக்கியே
வற்புறுத்திப் பெண்ணை வரணாய்க் கொடுக்கின்ற
வழக்கத்தைத் தள்ளி மிதித்து நிமிர்ந்திடு
வல்லமைப் பெண்ணே துணிந்து செயற்படு




வீட்டுக்குள் பூட்டி வைத்து நம்
விதியை மாற்றும் பழைய பண்பாட்டை
மாற்றிடு இந்த மாறிடும் உலகில்
உரிமைக்காகக் கிளர்ச்சிகள் புரிந்திடு

பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும்
பாரதி சொன்னான் பயமின்றி அன்று
பாரினை வென்றிடும் ஆற்றலுள்ள பெண்மையே
போராடு உந்தன் சமத்துவ நிலைக்காய்



சாதம் தொடங்கி சந்ததி வரை படைப்பவள் நீ
சாவைத் தடுக்கும் விஞ்ஞானியும் நீ
சரித்திரத்தை மாற்றும் தலைவியும் ஆகின்றாய்
சகலரும் வியக்க வெற்றி நடை போடுவாய்!
★★★

# சுற்றாடலைப் பேணி சுகம் பெறுவோம்

ச. சரணியா. தரம் 7

மனித வாழ்க்கையில் நாம் சாதிக்க வேண்டியவை பல உள்ளன. அவற்றைச் சாதிக்க வேண்டுமாயின், நமது உடல் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும். பலமான உடல் நலம் மிக்கோரே பல்வேறு சாதனைகளை நிலைநாட்ட வல்லவராவர். "உடம்பார் கெடின் உயிரார் அழிவர்" என்றார் திருமூலர். "சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்." என்பது முதுமொழி. உடலைப் பாதுகாத்தால்தான் உலகில் இன்பமாக வாழமுடியும். இதற்குத் துணைபுரிவது சுற்றுச் சூழல் சுத்தமேயாகும்.

ஆதிகால மனிதன் சூழலோடு ஒன்றி, சூழலைப் பேணி வாழ்ந்தான். அதனால், அவன் நல்ல உடல் வலுவுடன் இருந்தான். இன்று மனிதன் சூழலைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாது, தனது தேவைக்கேற்றப பயன்படுத்துவதால், சூழலின் இயக்கம் பாதிப்படைகின்றது. சூழல் மாசடைகின்றது.

"சுத்தம் சுகம் தரும்." "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்." என்ற முதுமொழிகள் சுத்தம் பேணிச் சுகம் பெறும் வழியையும், சுகநலனின் முக்கியத்துவத்தையும் நமக்குப் புலப்படுத்துகின்றன. "நோய்க்கு இடம் கொடேல்" என்றார். ஔவையார். நோயின்றி வாள சுத்தம் மிக மிக அவசியம். "புறத்தூய்மை நீரால் அமையும்" என்ற



வள்ளுவர் வாக்கு இவ்விடத்தில் நினைவில் கொள்ளத்தக்கது.

பெருகிவரும் தொழிற்சாலை களில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் மக்களின் சுகவாழ்வைப் பெரிதும் பாதிக்கின்றன. இரசாயண உரங்கள், கிருமி நாசினிகள் போன்றன நிலத்தில் படிவதால் நீர் மாசடைகின்றது. பிளாஸ்ரிக் பொரு ட்களும், பொலித்தீன் உறைகளும் நிலத்தில் புதைந்து சூழலுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

வீடுகள் அமைப்பதற்காக வும், விவசாய செய்கைக்காகவும் காடுகள் அழிக்கப் படுகின்றன. இதனால் மழைவளம் குன்றுகின் றது. மரங்கள் தறிக்கப்படுவது மண்ணரிப்பு ஏற்பட ஏதுவாகின்றது. நிலம், நீர், வளி அனைத்துமே மனிதர்களின் நடவடிக்கையால் மாசுறுகின்றன. இந் நிலையினைத் தவிர்த்திட மக்கள் அனைவரும் முயற்சிக்கவேண்டும்.

குப்பைகளைக் கண்ட கண்ட இடங்களிலும் போடுவதைத் தவிர்க்க வேண்டும். தொழிற்சாலை களில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகளை உயிரினங்களுக்கு ஊறு விளைவிக்கா வண்ணம் சுத்தீகரித்த பின் வெளியேற்ற வேண்டும். சாக்கடைகளில் அசுத்த நீர் தேங்கி நிற்காது, உடனுக் குடன் கடலிற் சென்று கலத்தற் குரிய வழிவகைகளை மேற்கொள் ளவேண்டும். மழை வளம் பெருக்கவும், வளி வளம் சிறக்கவும், மண் வளம் பேணவும் மரங்களை நாட்டுதல் வேண்டும்.

நகரங்களை நோக்கி மக்கள் அதிகமாக நகர்வதால், அங்கு மக்கள் செறிவு அதிகரிக் கின்றது. இதனால் பல சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுகின்றது. கழிவுகளைக் கையாள்வதில் பெரும் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படுகின்றது. அத்துடன் சேரிப்புறங்களில் கண்ட இடங் களில் குப்பை கூழங்களைப் போடு வதாலும், மல சலம் கழிப்பதாலும் சூழல் பாதிக்கப்படுகின்றது.

வீடு சிறந்தால் நாடு சிறக்கும். நாடு சிறக்க மக்கள் நிலையான சுகத்தைப் பெறுவர். சுத்தம் பேணப்பட்டால், சுற்றாடல் அழகாகும். வாழ்வும் நலம்பெறும். நீர் இன்றி அமையாது உலகு. மரமின்றி மழை இல்லை. எமக்கு மழை இல்லையென்றால் நீர் இல்லை. எனவே, மரங்களை நட்டு மழை வளம் பெறுவோம். சூழலைப் பேணிச் சுகவாழ்வு பெறுவோம்.

☆☆☆




























காலைச் சிற












ாரின் கைவண்ணம்




















# நட்பு

செல்வி யோ. கஜாந்தினி. தரம் 8




நட்பு என்பது கீழே
விழுந்ததும் உடையும் கண்ணாடியல்ல
இடி விழுந்தாலும் உடையாத
இரும்புத்தூண் போன்றது

நட்பு என்பது விட்டு விட்டுப்
பெய்யும் மழை போன்றதல்ல
என்றுமே நிலைத்து நிற்கும்
வானம் போன்றது!



எதற்குமே ஜாதி மதம்
பார்க்கின்ற இவ்வுலகில்
இவற்றையெல்லாம் கடந்த
இனிமையான வாழ்வே நட்பு



நட்பு என்பது வற்றிவிடும் குளமல்ல
என்றுமே வற்றாத சமுத்திரம்
உடலை விட்டு உயிர் பிரிந்தாலும் ~ இவ்
உலகினில் நிலைத்திடும் உண்மை நட்பு!


நட்பு என்ற மூன்றெழுத்துள்
பிணைந்திருக்கும் உறவுகளோ
பற்பல கோடி இந்தப்
பார் முழுவதும் உண்டு



★★★

# காலைக்கதிரின் வளர்ச்சிதனில்


செல்வி கஜானி ஆறுமுகசாமி க.பொ.த. (உ. த)










வான்வளி உதிக்கும் வெளிச்சக் கீற்றதனை
வரவேற்று மகிழும் பறவைகளின் கானம் - அதுபோல்
சின்னஞ் சிறார்களின் சிறப்பினைக் கொணரும்
சிற்றிதழாம் காலைக் கதிரினைப் போற்றுவோம்.



அன்றைய சிறுவிதை இன்றுபெரு விருட்சமாக
விதைத்திட எழுந்திட்ட புதிய காலைக்கதிர்
ஏழை பணக்காரர் என்ற பேதமெதுவுமின்றி
அணையா ஒளியாய் மலர்ந்திடும் மழலைகளின் ஆக்கங்கள்

சிறார்களின் சிறந்த கைவண்ணம் என்ன!
சிந்திக்க வைக்கும் சிறுகுறிப்புக்கள் என்ன!
ஆற்றல் மிகுந்த அறிஞர்களை ஆக்குவதற்கோர்
அரும்பெரும் கொடையே எமது காலைக்கதிர்




உத்தமம் உரைக்கும் முத்தான வரிகள்
ரத்தினம் போன்ற பல்வேறு படைப்புக்கள்
கற்றிடப் பலரும் விரும்புகின்ற எமது ஊரின்
புதிய விடியலே எமது புதிய காலைக்கதிர்

☆☆☆

# இமைக்க மறந்த கண்கள்

தொகுப்பு – ச. கிரிசா, தரம் 9

கணினியிலும், கைத்தொலைபேசியிலும் அதிக நேரத்தைச் செலவிடுபவர்களுக்கு, உங்கள் கண்கள் இமைக்க மறப்பதால் அவை வறண்ட கண்களாகிவிடும் என்பதை அறிவீர்களா? ஏன் என எண்ணுகிறீர்களா? கணினித் திரையைத் தொடர்ந்து பார்ப்பதனால், படங்கள், வீடியோக்கள், சிறிய எழுத்துக்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து உற்றுநோக்கியவாறு வேலைகளைச் செய்யும்பொழுது எமது கண்கள் அதிகமான அழுத்தத்திற்கு உள்ளாகின்றன.

அத்தோடு அவை களைப்படைந்து இமைக்கத் தவறுகின்றன. இச் செயற்பாடு எங்களை அறியாமலே இடம்பெறுகின்றது. இதனால் கண்கள் களைப்படைந்து (Dry Eye) வறண்ட கண்களாகும் நிலைக்குத் தள்ளப்படுகின்றன. இதன் விளைவாகக் கண்ணில் இருந்து நீர் வடிதல், பார்வைக் குறைபாடு என்பன ஏற்படுகின்றது.

இவற்றைத் தவிர்க்க எமது கண்களைக் குறித்த நேரத்துக்கு ஒரு முறையேனும் கணினித் திரையில் இருந்து திருப்பி இமைத்து ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டும்.





## மாணவர்களின் ஆக்கங்களும் இச் சஞ்சிகை பற்றிய ஆக்கபூர்வமான விமர்சனங்களும் வரவேற்கப்படுகின்றன.

இப் "புதிய காலைக்கதிர்" சஞ்சிகையில் பிரசுரிப்பதற்காக புலம்பெயர், எமது கிராமத்து மாணவர்களிடமிருந்து கவிதை, சிறுகதை, கட்டுரை, ஓவியம் போன்ற பல்வேறு விதமான ஆக்கங்களையும் மாணவர் மன்றம் வேண்டிநிற்கின்றது. தங்களால் சுயமாக உருவாக்கப்பட்டதான ஆக்கங்களை தட்டச்சு செய்தோ கையெழுத்துப் பிரதியாகவோ வழங்க முடியும். ஓவியங்களை ஸ்கான் பண்ணி மென்பிரதியாகவும் அனுப்பிவைக்கலாம்.

உங்கள் ஆக்கங்களை அனுப்பவோ ஒப்படைக்கவோ வேண்டிய முகவரி :

மறுமலர்ச்சி மன்றம், காலையடி, பண்டத்தரிப்பு.


மின்னஞ்சல் முகவரி : saba.thanujan@gmail.com

# குழந்தையின் வீடு

செல்வி சி. விதுர்ஷா. க.பொ.த. உயர் தரம்.


தரம் 5 வகுப்பறைக்கு வெளியே நின்ற வேப்பமரத்தின் கீழே, கழுங்கமற்ற முகத்தில் முத்துக்களாய் கண்களில் இருந்து வழியும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே தேம்பியவாறு நின்றாள் நிலா. பெயரிற்கேற்ற அழகு. அறிவும் அடக்கமும் நிறைந்த அந்தப் பிஞ்சுக் குழந்தையின் மனதில் இருக்கும் ஆறாத காயங்களை யார் அறிவார்? அந்தக் குழந்தை சிறிது சந்தோசமாக இருப்பதே பள்ளி நேரங்களில்தான். ஆனால், இன்று வீட்டு வேலை செய்யவில்லை என்று ஆசிரியர் வகுப்பிற்கு வெளியே விட்டுவிட்டார். நிலாவிற்கு இருந்த கொஞ்ச சந்தோசமும் ஆசிரியரின் தண்டனையால் விட்டோடிப் போனது.

நிலாவின் கலகலப்பும், கல்வி மீதிருந்த ஆர்வமும் சில காலமாக குறைந்து போயிருந்தமையினை அவதானித்தார் சரவணன் ஆசிரியர். வேப்பமரத்தடியில் அழுதுகொண்டிருக்கும் நிலாவைத் தட்டினார். கண்ணால் வந்த கண்ணீரை ஆசிரியருக்குக் காட்டிக்கொள்ள விரும்பாமல் துடைத்துக்கொண்டாள். "ஏன் நிலா அழுகிறீங்கள்?" என்றார் அசிரியர். "இல்லை சேர்... ரீச்சர்... வீட்டுவேலை செய்தரேல்லை..." என்று இழுத்தாள். "ஏனம்மா வீட்டு வேலை செய்யவில்லை. நீங்கள் நல்ல பிள்ளைதானே. ஏன் இரவு வீட்டு வேலை செய்யவில்லை?" என்று கேட்க, மீண்டும் நிலாவின் கண்கள் குளமாகின. ஆசிரியர் மேலும் நிலாவிடம் விசாரிக்காமல், வகுப்பாசிரியரிடம் கதைத்து நிலாவை உள்ளே விட்டார். பின்னர் நிலாவின் பக்கத்து வீட்டு நண்பி மாலாவிடம் விபரங்களைக் கேட்டார். "சேர், நேற்று இரவு நிலாவின்ர அப்பா நல்லாக் குடிச்சுப்போட்டு, சாப்பாடு சரியில்லை எண்டு அவான்ர அம்மாவைப் போட்டு அடிச்சவர். ஆவாவின்ர அம்மா பாவம், நிலாவைக் கூட்டிக்கொண்டு கிணத்துக்குள்ள விழப் போக,



எங்கட அம்மா ஆக்கள்தான் மறிச்சுக் காப்பாத்தினவை சேர்” என்று அவள் கூறியதில் இருந்து நடந்ததைத் தெரிந்துகொண்டார்.

அன்று பாடசாலை விட்டதும் சரவணன் ஆசிரியர் நிலாவின் தந்தையத் தேடி அவர் வேலை செய்கின்ற பல்வேறு இடங்களுக்கும் சென்றார். ஆனால், மாலை வரை தேடியும், நிலாவின் தந்தையைக் காண முடியவில்லை. பின்னர் ஒரு யோசனை உதிக்க மதுபானக் கைடைக்குச் சென்று பார்த்தார். அங்கு அப்போது வந்திறங்கிய நிலாவின் தந்தையைக் கண்டு, ஆசிரியரைக் கண்டு பம்மிக்கொண்டு நின்றவரின் அருகில் சென்று, “நான் உங்களிடம் நிலாவைப் பற்றிக் கொஞ்சம் கதைக்க வேணும்.” எண்றார். “அப்பிடியா! என்ன விஷயம் சேர்?” என்று கேட்டார் தந்தை. பாடசாலையில் மிகவும் கெட்டிக்காரியான நிலா எதிர் கொண்ட கசப்பான அனுபவத்தை ஆசிரியர் சொல்ல. “ஓ நேற்று வீட்டில கொஞ்சம் பிரச்சினை. அதுதான்....” என்று இழுத்தார் தந்தை. ஆசிரியர் நிலாவின் தந்தையிடம் “நீங்கள் குடிக்கிறதாலைதான் வீட்டில ஒரே பிரச்சினை என்று கேள்விப்பட்டேன்.” என்றதும் வெட்கத்தில் தலை குனிந்த தந்தை, “பகல் முழுக்க கூலி வேலை செய்து போட்டு, உடம்பு நோ தெரியாமல் நித்திரை கொள்ளுறதுக்காகக் கொஞ்சம்....” என்று இழுத்தார். அதற்கு ஆசிரியர் “நீங்கள் இவ்வளவு கஸ்ரப்பட்டு உழைக்கிறது யாருக்காக?” என்று சற்றுப் பரிதாபத்துடனும் ஆத்திரத் துடனும் கேட்டார். “எல்லாம் என்ர ஒரே ஒரு செல்வத்துக்காகத்தான். நாங்க பர்ற கஸ்ரம் நிலா படப்பெடாது. அவள் படிச்சுப் பெரியாளா வரவேணும் என்டிறதுக்



காகத்தான் சேர்” என கண்கள் பனிக்க உணர்ச்சிவசப்பட்டுக் கூறினார். “ஆனால், உங்கட இந்தக் குடிப்பழக்கத்தால, உங்கட பிள்ளையால மட்டுமில்லை, அயலிலுள்ள பிள்ளையளாலையும் படிக்க முடியாமல் போகுது. ஆதால உங்கட சமுதாயமே பின்தங்கிப் போகுது. சின்னப் பிள்ளையளுக்காக உழைக்கிற காசைக் குடுத்து ஏன் உந்த நஞ்சை வாங்கிக் குடிச்சு உங்கட வாழ்க்கையை நீங்களே அழிக்கிறீங்கள்.” என்ற ஆசிரியரின் குரல் காதில் விழுவதற்கு முன்னரே, அவரை மன்னிப்புக் கேட்பது போல் பார்த்த நிலாவின் தந்தை சைக்கிளைத் திருப்பினார். அவ்வளவு நேரமும் அலைந்து திரிந்த களைப்பை மறந்தவராய், திருப்தியுடன் வீடு வந்து சேர்ந்தார் சரவணன் ஆசிரியர்.

சாராயம் குடிப்பதற்காக வைத்திருந்த காசில் போகும் வழியில் இருந்த கடையில் நிலாவுக்கு கலர் பென்சில்களும், இனிப்புக்களும் வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்த நிலாவின் தந்தையை வெறுப்புடன் நோக்கிய தாயார், வெறியில்லாமல் வேளைக்கு வந்தமையையும், கையில் இருந்த இனிப்புப் பொட்டலத்தையும் பார்த்து ஆச்சரியப்பட்டார். பயந்து ஒதுங்கிய நிலா ஓரக்கண்ணால் பார்த்து ஒன்றும் விளங்காது விழித்தாள். தந்தை தான் ஆசிரியருடன் கதைத்ததையும், இனிமேல் மது அருந்தமாட்டேன் எனவும் தெரிவித்ததுடன். கொண்டுவந்த பொட்டலத்தை நிலாவிடம் கொடுத்து அவள் நெத்தியில் முத்தமிட்டார்.

மறுநாள் பள்ளியில் மலர்ந்த முகத்துடனும் வசீகரிக்கும் புன்னகையுடனும் வலம் வந்தாள் நிலா. சரவணன் ஆசிரியரைக் கண்டதும் ஓடிச் சென்று வணக்கம் கூறியவள், நேற்று வீட்டில் நடந்ததை நன்றி கலந்த புன்முறுவலோடு கூறினாள்.

★★★

## மறுமலர்ச்சி மன்றத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் ஆரம்பித்துவைப்பு



மறுமலர்ச்சி மன்றத்தின் அறிக்கைகள், செய்திகள், வெளியீடுகள், நிகழ்வுகள் தொடர்பான தகவல்களை இணையத்தின் ஊடாக அனைவரும் அறிந்துகொள்ளும் பொருட்டு மறுமலர்ச்சி மன்றத்தின் உத்தியோக பூர்வ இணையத் தளம் www.marumalarchy.org என்ற முகவரியில் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளமையை அனைவருக்கும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

# அம்மா!

செல்வி யோ. கஜாந்தினி. தரம் 8

கண்ணை இமை காப்பதுபோல்
என்னை நீ காத்தாய்
காயை மரம் தாங்குவதுபோல்
தாயே என்னை தாங்கினாய்

பத்து மாதம் என்னை நீ
பக்குவமாய்ப் பேணி
பத்திரமாய் இந்த உலகிற்கு
என்னைக் காட்டினாய்

நிலாவைக் காட்டி
இராச் சோறு ஊட்டி
நிகரில்லா உன்னன்பை
நீயெனக்குக் காட்டினாய்

உண்ண உணவு தந்தாய்
குடிக்கப் பால் தந்தாய்
அணிவதற்கு ஆடை தந்தாய்
கற்பதற்குப் பல கதைகள் சொன்னாய்

கூட்டியும் பெருக்கியும் நீயுழைத்த
கூலிக் காசில் என்னைக்
கூட்டலும் பெருக்கலும்
கற்க வைத்தாய்

நீ நடப்பதற்குக்கூட
செருப்பு வாங்காமல்
நான் பறப்பதற்காக நீ
சிறகுகள் சேகரித்தாய்

இவ்வுலகில் உன்னைத்தவிர
இன்னொன்று பெரிதில்லை
உன்னோடு வாழ்வதை விட
இனிமையானது வேறில்லை!

★★★



# பாழடைந்த கிணற்றின் சுயசரிதை

செல்வி அனோஜா

2040ஆம் ஆண்டு ஒரு மாலை நேரம் நான் வீதியால் சென்று கொண்டு இருக்கும்போது, "தம்பி என்னைத் தெரியவில்லையா?" என்று குரலொன்று கேட்டது. திரும்பிப் பார்த்தேன், வீதியின் ஓரத்தில் மூலையில் இருந்த பாழடைந்த கிணறு ஒன்று தன் கதையைச் சோகத்துடன் சொல்ல தொடங்கியது.

யாழ் குடாநாட்டில் இந்த அரசடி என்னும் கிராமத்தில் என்னை அமைப்பது என இந்த ஊர் கிராம சேவகர் பல வருடங்களுக்கு முன்னர் திட்டமிட்டார். சில தொழிலாளர்களை வைத்து உருவாக்கினார். இந்தக் கிராம மக்களும் என்னை உருவாக்கப் பூரண ஒத்துழைப்பை வழங்கினர். பத்தே நாட்களில் நான் அழகிய கிணறாக உருவெடுத்தேன். என்னை திறந்து வைக்கும் வைபவம் ஒரு நன்நாளில் இடம்பெற்றது. கிராம சேவகர் இந்த ஊர் மக்களிடம் என்னைக் கையளித்தார்.

இந்த ஊர் மக்கள் என்னைப் பெரிதும் பயன்படுத்துவர். வயலுக்குச் சென்று களைத்து வரும் பெண்கள் என் தூய நீரைக் குடிப்பர். கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் மாணவர்கள் எனது கிணற்று நீரை அருந்துவர். அயல் ஊர்களில் இருந்து வந்து என் கிணற்று நீரை அள்ளி வாகனங்களில் எடுத்துச் செல்வர். மாதகல் பஸ் சாரதிகளும் கூட என் தண்ணீரையே அள்ளித் தங்கள் காலுக்குக் கீழ் வைத்து பஸ்ஸில் எடுத்துச் செல்வர்.



இவ்வாறாக எல்லோருக்கும் மிகவும் பயனுள்ள கிணறாக நான் பல வருடங்கள் இருந்து வந்தேன்.

ஆனால், இந்தப் பிரதேசத்தில் பல காலங்கள் மழை பொழியாமல் ஏற்பட்ட வறட்சியினாலும், மக்கள் நிலத்தடி நீரை அளவுக்கதிகமாகத் தொடர்ந்து வீண் விரையம் செய்ததாலும், நான் மெல்ல மெல்ல வற்றி வறண்டுபோகத் தொடங்கினேன். மக்களும் என்னை மெல்ல மெல்லக் கைவிட்டு அந்தக் காலத்தில் மலிவாகக் கிடைத்த, இரசாயணம் கலந்த போத்தில் தண்ணியை அருந்தத் தொடங்கினர். நானும் பராமரிப்பார் இன்றி பாழடைந்து போய்விட்டேன். ஆனால், இன்று இங்கு வந்த கிராமப் பெரியவர்கள் போத்தல் தண்ணியின் விலை உயர்வு, அதனால் ஏற்படும் தீர்க்க முடியாத நோய்கள் காரணமாக மீண்டும் என்னை ஆழப்படுத்த வேண்டும் என கூறிக்கொண்டது எனக்கு ஓரளவு நம்பிக்கையைத் தருகின்றது. என்று அந்தக் கிணறு தனது கதையைச் சொல்லி முடித்தது.

# என் அன்னை

செல்வி கு. பதுர்சிகா



அன்பெனும் மழையால் எம்மை
அரவணைப்பவள் அன்னை
அகிலத்தின் ஊற்றாய் எமை
உருவாக்கியவள் அன்னை

கனிவுடன் கண்டிப்பும் காட்டியே
கல்வியை ஊட்டுவாள் அன்னை
கசப்பான வாழ்வையும் கரும்பாய்
இனிக்க வைப்பவள் அன்னை


கல்வியே கண்ணெனக் கூறி
கருத்துடன் வழிகாட்டுவாள் அன்னை
பண்பாட்டை எமக்குப் பழக்கவே
பற்பல கதைகள் கூறுவாள் அன்னை



எம்மை வளர்க்கத் தம்மை உருக்கிடும்
பாசத்தைப் பொழிந்தெம்மை பாரினில் உயர்த்திடும்
அன்னையர் தம்மை என்னென்றும் போற்றியே
முதியோர் இல்லங்களை மூடுதல் செய்வோம்

# கையடக்கத் தொலைபேசியை கட்டுப்பாடாகப் பயன்படுத்துவோம்

திரேகா, தரம் 11.




இன்று கையடக்கத்தொலைபேசி இல்லாத மக்களே இல்லை எனலாம். ஆரம்ப காலங்களில் 'கூ.....' சத்தத்தின் ஊடாகவும், புகை, முரசு, ஓலைச் சுவடி, புறா, செய்தியை அம்பில் கட்டி ஏவுதல் என்பவற்றைப் பயன்படுத்தி மனிதர்கள் செய்திகளைப் பரிமாறிக்கொண்டனர். இருபது வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் மக்கள் கடிதத்தையே செய்திப்பரிமாற்றத்திற்கு நம்பியிருந்தனர். தபாற்காரரின் வருகையை வைத்த கண் வாங்காமல் பார்த்திருப்பார்கள். ஒருவர் இறந்துவிட்டார் என்றால், அந்தச் செய்தி வெளிநாட்டில் இருக்கும் அவரது உறவினருக்கு இறந்தவரின் அந்தியட்டி நிறைவடைந்த பின்னர்தான் கடிதம் மூலம் தெரியவரும்.

ஆனால், இன்று தொடர்பாடல் நினைக்கமுடியாத அளவுக்கு முன்னேறியுள்ளது. செய்மதி செய்திப்பரிமாற்றத்தினூடாக சில செக்கன்களில் உலகின் எந்த மூலை முடுக்கில் உள்ளவரோடும் தொடர்புகொள்ளும் வசதி இன்று இருக்கின்றது. இதனால், தேவையற்ற ஆட்களுடன் தொடர்பைப் பேணுவதாலும், தேவையற்ற விடயங்களில் கவனத்தைச் செலுத்துவதாலும் பணம் ஊதாரித் தனமாகச் செலவு செய்யப்படுகின்றது. தேவையற்ற பிரச்சினைகளுக்கும் உள்ளாகின்றார்கள். பல இளைஞர் யுவதிகளின் வாழ்வு இதனால் சீரழிகின்றது. ஆனால், இக் கையடக்கத் தொலைபேசிப் பாவனையால் பாதகம் மட்டுமன்றி சாதகமான விளைவுகளும் உண்டு. வியாபாரம், கல்வி, அவசர உதவி, மருத்துவம் ஆகியவற்றுக்கு பெரிதும் உதவுகின்றது. நேரம் மீதப்படுத்தப்படும். செய்திகளை உடனடியாக அறியலாம். குறுந் தகவல்களூடாகக் குறைந்த செலவில் செய்திகளைப் பரப்பலாம். சில வேளைகளில் குறுந்தகவல்களில் பொய்யான வதந்திகளும் பரப்பப்படுவதுண்டு. இவ்வாறான செயற்பாடுகளால் பல தற்கொலைகளும் இடம்பெறுகின்றன. ஆகவே, மாணவர்களாகிய நாங்கள் கையடக்கத் தொலைபேசியை மிகவும் கட்டுப்பாடாகப் பயன்படுத்தப் பழகிக்கொள்ள வேண்டும்.

# தாய்

செல்வி கு. டன்சா, தரம் 11.



பாசத்தின் உறைவிடம் தாய்
பாரினில் எம்மை வாழ வைப்பவள் தாய்
இறைவனால் படைக்கப்பட்ட
இனிமையான உறவு தாய்

இல்லத்தைக் காக்கும்
இன்ப நிலவு தாய்
கல்வியில் நாம் உயர
தன் வாழ்வை வழங்குபவள் தாய்

பிள்ளையின் ஆசையை நிறைவேற்றி வைக்க
புல்லு கட்டைச் சுமப்பவள் தாய்
இப்புவி மீதில் உண்மை அன்புக்கு
இலக்கணமாக வாழ்பவள் தாய்


தாயின் கைவண்ணம் வீட்டைக் கோயிலாக்கும்
கல்வியின் சிறப்பால் தாய் பல்கலைக் கழகமாவாள்
வையகம் உள்ளவரை என் தாய் நீ
வாழவேண்டுமென கடவுளைப் பிரார்த்திப்பேன்.

# நஞ்சுண்ட குஞ்சன்

துலங்கன்

உலகத்தில பாருங்கோ தற்கொலை செய்யிறத்துக்கு ஆளாளுக்கு ஒவ்வொரு காரணம் இருக்கும். லவ்சு, கடன், விசர், மானப்பிரச்சனை, மாறாத வருத்தங்கள் எண்டு கன பிரச்சனைகள் இருக்கிது கண்டியளோ? அதில முதலாவது பிரச்சனை தான் எங்கட லூசுக் ஹீரோ குஞ்சனுக்கு இருக்கிற பிரச்சனை.

குஞ்சன் வீட்டில மூண்டாவது பிள்ள, இவனுக்கு மூத்த தமையனுக்கும் தமக்கைக்கும் கலியாணம் முடிஞ்சு கன வரியம் ஆச்சு. அதுக்குப் பிறகு தாய்க்கும் தேப்பனுக்கும் குஞ்சனைப் பற்றி யோசிக்கிற எண்ணமே இல்ல. அவனும் பொறுத்துப் பொறுத்து பாத்தான் ஒரு அசிகிடயும் காணேல்ல. இனி உவய நம்பி பிரயோசனம் இல்ல எண்டுவிட்டு தானே களத்தில இறங்குவோம் எண்டு யோசிச்சுக் கொண்டு கோடிக்கிள்ள போய் விழுந்து முளை விட்ட பூரான் ஊமலுகள பெறிக்கிக் கொண்டு வந்து பூவரசம் குத்தியில வச்சு வெட்டி பூரான் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அப்பத்தான், அம்மா விரதத்துக்கு சாப்பிட ரண்டு வாழை இலை வாங்கிக்கொண்டு வரட்டாம் எண்டு சொல்லிக்கொண்டு முன் வீட்டு சறோ வந்து நிண்டாள். திடுக்கிட்டு



திரும்பி பாத்தான் குஞ்சன். இரட்டை பின்னல்ல இருட்டு ரிப்பன் கட்டி இளிச்சுக்கொண்டு நிண்டாள் சறோ. அடுத்த செக்கண்டே தனனம் தனனம் எண்டு புதிய வார்ப்புகள் பட மியுசிக் பிரட்டி எடுத்தது குஞ்சன்ர மனதில. அதுக்குப்பிறகு கடுகளவு காதல் கள்ளுப் பெட்டி அளவாகி வாடா போடா ஓட்டப்பல்லா போடி வாடி குட்டிப்பல்லி எண்ட அளவுக்கு வளந்துவிட்டுது.

இதுக்கிள்ள குஞ்சன்ர தேப்பனுக்கும் தாய்க்கும் லேசாய் தெரிய வந்துவிட்டுது இவயின்ர ஊஞ்சல் ஆட்டம். அவ்வளவும்தான் பிறகென்ன துவங்கினார் தேப்பன் சுப்பிரபாதம். ஒரு கட்டத்தில சொன்னார் நீ அவள மறக்காட்டி உன்ன நான் தூக்கி தலைகீழா அடிச்சு சாக்கொண்டு போடுவன்ரா எண்டு. குஞ்சன் இதக் கேட்டுவிட்டு கொடுப்புக்கிள்ள சிரிச்சான். ஏனென்டால், குஞ்சன் தேப்பன விட சரியான உயரம். தேப்பன் கட்டையர்.

முதலல் உவர் என்னத் தூக்கட்டும் பிறகு சாக்கொல்லுறதப் பற்றி யோசிக்கலாம் எண்டு நினச்சு சிரிச்சான்.

இதில பகிடி என்னண்டால் ரண்டு பேரும் குஞ்சன பேசேக்க மெதுவாத்தான் பேசுவினம். ஏனென்டால், முன் வீட்டு சறோவின்ர தாய் தேப்பனுக்கு தெரிஞ்சால் மேளுக்கு ஊக்கம் குடுத்து அவன கூட்டிக் கொண்டு எங்கயாவது ஒடடி எண்டு அவள எப்பிடியாவது தள்ளி விடப் பாப்பினம். சரி எண்டு விட்டு குஞ்சன் இவைய சம்மதிக்க வைக்க என்ன செய்யலாம் எண்டு தன்ர பிரெஞ்சிக ளிட்ட ஐடியா கேட்டான். அவனுக்கு நெரிங்கின மூண்டு பிரென்சிகள் இருக்கினம். ஓண்டு வரதன், மற்றது பரமு, என்னுமொண்டு ரத்தினன். இதில வரதன் பழைய பிரச்சன ஒண்டில குஞ்சன பழி வாங்க நல்ல தருணம் எதிர் பாத்துக் கொண்டு இருந்தவன். அந்த நேரத்திலதான் குஞ்சன் வந்து தாய் தேப்பன சம்மதிக்க வைக்க இவங்களிட்ட ஐடியா கேட்டான். வரதன் சொன்னான் நான் ஒரு பிளான் சொல்லுறன் மச்சான் நான் ஒரு போலுடோன் போத்தில் கொண்டு வந்து தாறன் கோடிக்கிள்ள கொண்டு போய் எல்லாத்தையும் ஊத்திப் போட்டு கொஞ்சத்த விரலால தொட்டு நாடியிலையும் ரண்டு கன்னத் திலையும் பூசிப்போட்டு ஒடியந்து உங்கட படலைக்கிள்ள விழு மற்றத நாங்கள் பாத்துக்கொள்ளுவோம் சரியோ?

சரியெண்டு நாளும் நேரமும் கதச்சுப் பேசியாச்சு. குஞ்சன் கோடிக்கிள்ள இருந்து ஓடிவந்து படலையடியில விழுந்தான். உடன வரதன் ஐயோ குஞ்சன் போலுடோன் குடிச்சுவிட்டான் எண்டு குளரத் துவங்கிவிட்டான் .உடன பக்கத்து வீட்டு சனங்கள் எல்லாம் ஓடி வந்துவிட்டினம். ரத்தினன் சொன்னான் ஒரு ஆள் ஓடிப்போய் தேங்காய் எண்ணை கொண்டுவாருங்கோ, என்னுமொரு ஆள் தேங்காயை உடைச்சு துருவிங்கோ தேங்காய் பால் பருக்கினால் சத்தி எடுக்க வைக்கலாம் எண்டு சொல்ல, தேப்பன் உவன் என்ர பிள்ளை இல்லை உவன சாகவிடுங்கோ எண்டு சத்தம் போட, தாய் ஐயோ என்ர பிள்ள போலுடோல் குடிச்சுவிட்டான் எண்டு குளறிக் கொண்டிருக்க, அப்பதான் வரதன் சொன்னான், ஓராள் ஓடிப்போய் மாட்டுச்சாணி அள்ளிக்கொண்டு வாங்கோ கரைச்சு பருக்கினால் சத்தி எடுப்பன் எண்டு. குஞ்சனுக்கு பகீர் எண்டு போச்சு. உண்மேல சாணி கரைச்சு பருக்கிப்போடுவன்களோ? எண்டு பயந்துபோனான்.



அவன் பயந்த மாதிரி பரமு அவன்ர வாய துறந்து பிடிக்க வரதன் சட்டியோட சாணித் தண்ணிய குஞ்சன்ர வாய்க்கிள்ள ஊத்த, குஞ்சனால தாக்குப் பிடிக்க முடியாமல் ரண்டு மூண்டு முறடு குடிச்சே விட்டான். வரதன் அவன பழி வாங்கின சந்தோசத்தில அவன ஒரு நக்கல் பார்வ பாத்தான். குஞ்சன் எழும்பி அவுக், அவுக்கெண்டு சத்தி எடுத்துப்போட்டு வரதன அப்பாவி மாதிரிப் பாத்தான். வரதன் சொன்னான், ஏன்ரா போலுடோல் குடிக்கிற மாதிரி நடிக்கிறதெண்டு சொல்லிப்போட்டு உண்மேலயே குடிச்சுவிட்ட என்னடா? எண்டு கேட்டதுதான் குஞ்சன்ர தலையில இடி விழுந்த மாதிரி இருந்திச்சு.

கடசியா தாய் தேப்பன ஏமாத்த நினச்ச குஞ்சன் தானே ஏமாந்த கதை இதுதான். இருந்தாலும் பிறகு அவன் சறோவை கலியாணம் செய்து மூண்டு பிள்ளையள் பெத்து, அதுகள வெளிநாட்டுக்கு அனுப்பி கலியாணமும் செய்து வச்சு, பேரப்பிள்ளயளையும் கண்டுவிட்டினம்.

☆☆☆



எமது கிராமத்தின் தாய்க் கழகமான அம்பாள் சனசமூக நிலையத்தின் நூலகம் மீண்டும் புதுப்பொலிவுடன் கடந்த 02.03.2014 தொடக்கம் புத்துயிர்ப்புப் பெற்றுள்ளது.

இதில் முதற்கட்டமாக திரு குமாரசாமி இரவிமோகன் (கனடா) அவர்களினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட ரூபா 120 000 பெறுமதியான நூல்கள் எமது கிராமத்தவர்களின் வாசிப்பினூடான அறிவு விருத்திக்காக வைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வாரமும் புதன், வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் பி.ப. 4 - 6 மணிவரை மக்களின் பயன்பாட்டிற்காகத் திறந்திருக்கும் இந்நூலகத்தில் இருந்து நூல்களை இரண்டு வாரங்களுக்கு இரவல் பெற்றுக்கொள்ள முடியும்.






BEN
10







